RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s238

OPEN ACCESS

# சித்தர் இலக்கியங்களின் வழி இறைக்கோட்பாடு

**இளமதி ஜானகிராமன் [அ, *]**

[அ] சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605014, இந்தியா

# The Concept of God in Siddha Literature

**Ilamathy Janakiraman [a, *]**

[a] Subramaniya Bharathi School of Tamil, Pondicherry University, Puducherry-605014, India

* Corresponding Author:
prof.ilamathy@gmail.com

Received: 04-01-2021
Revised: 12-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

## ABSTRACT

The people of this World could attain good conscience only by way of faith in God and the same was experienced and preached by the Siddhas. The Siddhas are aware of the loss of faith in God among the people due to various circumstances. So the Siddhas proclaims that the world has the power to create it, the divine attributes, the way of worship, and so on. The Kagapusunda Kaviya explains that "Shakti" appears through something called "Brahmam" and creates Siva and other deities in this World. During the period of destruction, again everything goes into "Shakthi". All Siddhas says that the God is one and not many. That said divine one is set differently according to period, environment and place. The Siddhas explains in his poems/songs that the fake monks are deceiving the people by pretending them as God and don't fell prey to the fakes and further the people can worship by performing the four precepts of Sariya, Kriya, Yoga and Gnanam and one can become a God by attaining Gnanan. This Article explains the above said concepts by quoting the poems of the Siddhas.

**Keywords:** Siddhas, Brahmam, Shakthi, God, Siddha Literature

## முன்னுரை

சித்தத்தை அடக்கி அதன் வாயிலாகப் பல்வேறு சித்திகளைப்பெற்று, இறைகுறித்த தமது அனுபவக் கருத்துக்களையும் மக்களுக்குத் தெரிவித்து அவர்களை நேர்வழி நடக்கத் தூண்டியவர்கள் சித்தர்கள். இறை குறித்த உண்மையை உணர்ந்தவர்கள். இக்காலத்தில் இறை குறித்த நம்பிக்கை பாமரமக்களிடையே நிரம்பி இருப்பதைப் போன்று நன்கு படித்தவர்களிடத்தில் இல்லாதது உள்ளங்கை நெல்லிக்கனி. அதற்கான காரணம் குறித்து ஆராய்ந்து உரைப்பதும் சித்தர்களது இலக்கியங்களின் வாயிலாக, இவ்வுலகத் தோற்றத்திற்குக் காரணமாகிய சக்தி, இறை ஒன்றே என்ற உண்மை, இறைவனின் பண்புகள், போலிகளை இனம் காணல், வணங்கும் முறை, பக்தியின் பயன், இரண்டற்ற தன்மை எனும் முடிநிலை போன்ற பல கருத்துக்களை வெளிப்படுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

முன்னோர்களால் பலவாறாகப் போற்றிப் பரவப்பட்ட கடவுள் பற்றிய நம்பிக்கை இன்றைய நிலையில் பலரிடம் அற்றுவிடக் காரணம் என்ன என்பதை ஆராயும் பொழுது,

1. பணத்தினைக் கொடுத்தால் கிடைக்கின்ற பொருட்களைப் போல காசினைக் கொடுத்தால் கடவுள் கிடைத்தல் இல்லை.
2. வாழ்க்கையில் துன்பங்களும் துயரங்களும் நிறைய அனுபவிக்க வேண்டியுள்ளது.

3. அறிவியல் சாதனங்களின் பெருக்கம் தொலைக்காட்சி, திரைப்படம், பத்திரிக்கைகள், நாவல்கள் போன்றவை இருக்க கடவுளை நினைக்க நேரமில்லை.
4. வயதானவர்களுக்கு மட்டுமே இருக்க வேண்டிய கவலை என்று இளந்தலைமுறையினர் எண்ணுவது.
5. வஞ்சனையும், பொய்யும், சூதும், களவும், கொலையும் நிறைந்துள்ளமை.
6. போலித்துறவியர்களின் பெருக்கம்.
7. அற்புதங்களைச் செய்யும் ஆத்ம ஞானிகள் மறைந்துள்ளமை.
8. உண்மை பக்தர்கள் இன்மை.
9. கல்வி கற்றல் அதிகமாக உள்ளதால் கற்றுவிட்டோம் என்ற செருக்கும், அனைத்தையும் சாதித்து விடுவோம் என்ற நினைவும் அதிகமாக இருத்தல்.
10. இல்வாழ்க்கையர் காண முடியாது. துறவிகளால் மட்டுமே இயலும் என்ற பொய்க்கூற்று.

முதலான கருத்துக்கள் முன்நிற்கின்றன.

இன்றைய நிலையில் கடவுள் வழிபாட்டினைக் குறித்து மக்களிடம் வினவின்,

1. முன்னோர்கள் வழிபட்டனர் அதனால் தொடர்ந்து செய்ய வேண்டி உள்ளது. செய்யாமல் விட்டால் ஏதேனும் தீங்கு நேருமோ என்ற அச்சம் காரணமாகவே செய்கின்றோம்.
2. சிலர் பக்திப் பாடல்களை மனப்பாடம் பண்ணுதல், மொட்டை அடித்துக் கொள்ளுதல், மதச் சின்னங்களை அணிந்துகொள்ளுதல், காவி அணிதல் போன்றவையே இறை அருளைப் பெறச் செய்வன என்று நினைத்தல்.
3. மற்றும் சிலர், சடங்காக வழிபாட்டினை நடத்தல். மனம் அதில் ஒன்றாது, சொல்லுகின்ற மந்திரங்களுக்கு என்ன பொருள் என்பதை உணராது மனப்பாடம் செய்வதை வைத்து வயிற்றுப் பிழைப்புக்கு வழிகளைத் தேடுதல்.
4. சொல்லும் செயலும் ஒன்றா நிலையில் நல்லொழுக்கமும் இன்றிக் கடவுள்; நேரிலா வந்து பார்க்கப் போகிறார்? என்ற எண்ணத்தில் சிலர் வழிபாடு செய்தல் போன்றவை, கடவுள் வழிபாட்டின் பொருளை மிகவும் கீழ்மைப்படுத்திவிட்டன.

இவற்றை முழுமையாக உணர்ந்ததால்தான் இவ்வுலகமே இறைச் சக்தியால் தோற்றுவிக்கப்பெற்றது என்பதைச் சித்தர்கள் புலப்படுத்துவர்.

## பிரமமும் சக்தியும்

இவ்வுலகம் ஆதிபராசக்தி எனும் பெண் சக்தியில் தோன்றி பெண் சக்தியிலேயே ஒடுங்குகின்றது என்பதை, காகபுசுண்டர் தம் காவியத்தில் உரைப்பர். இதனை இராமதேவர் முதலான சித்தர்களும் ஏற்பர். பிரளயங்கள் ஏற்பட்டு அனைத்தும் அடங்கிவிட்ட பிறகு பிரம்மம் இவ்வுலகத்தைத் தோற்றுவிக்க நினைக்கும்பொழுது காலத்தம்பத்தில் ஆதிபராசக்தி தோன்றி சிவன், திருமால் போன்ற தெய்வங்களை அழைப்பாள். திருமால் தன் உந்திக்கமலத்தில் பிரமனை உருவாக்க அவருள் அடங்கியிருந்த உயிரினங்களை வெளிக்கொணர இவ்வுலகம் தோன்றுகிறது. ஒடுக்கக் காலத்தில் அனைத்தும் உருவாகியபடியே ஆதிபராசக்தியில் ஒடுங்கிவிடுகின்றன என்று காகபுசுண்டர் உரைப்பர். (காகபுசுண்டர் காவியம்)

## சித்திகளைத் தருபவள் சக்தியே

சித்தர்கள் பெண் சக்தியே சித்திகளைத் தருகின்றது என்ற மெய்ம்மையைப் பொருண்மையாகக் கொண்டமையால் தங்களது பாடல்களில் அவற்றைப் பதிவு செய்துள்ளனர். சட்டைமுனி, சிவனது இடதுபுறத்தில் நிற்பவள் அட்டமாசித்தியினை அளிப்பவள், புகழ் வாய்ந்த இரத்தின ஆரம் பூண்டவள்,

இவளது திருவடிவினைக் காண்பதற்கு நவகோடி தேவர், சித்தர் முதலானோர் நிற்பர். எருதின்மேல் ஏறுகின்ற அப்பன் ஏழை எனவே, அவரிடம் சொல்லாமல் இவ்அம்மையின் முன்னே வைத்துக் கேட்டால் நாம் கேட்டதையெல்லாம் அருளிச்செய்வாள். அவளின் வழி அவற்றைப் பெற்று மவுனத்தைப் பெறவேண்டும் என்பர். (சட்டைமுனி முன்ஞானம் 100)

இவ்வாறு சித்திகளைத் தருகின்ற சக்தியானவள் சிவத்தைத் தோற்றுவித்து சிவத்துடன் ஒன்றி மக்களை வாழ்விக்கின்றாள் என்பதால் சிவமும் முன்நிறுத்தப் பெறுகின்றார்.

## இறை உண்மை

எழுத்துக்களெல்லாம் 'அ' கரத்தை முதலாகக் கொண்டது போல் இந்த உலகமானது ஆதிபகவனையே முதலாகக் கொண்டது என்று வள்ளுவர் கூறுவதும், முதலில் வார்த்தை இருந்தது. இது இறைவனோடு இருந்தது என்று பரிசுத்த வேதாகமம் கூறுவதும், இந்தநிலமிசை நீடு வாழ வேண்டுமெனில் மலர்மிசை ஏகியவனின் மாணடிகளைச் சேருதல் வேண்டும் என்பதும், பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்றல் வேண்டும் என்று கூறுவதும். மனக்கவலைக்கு மருந்து தனக்குவமை இல்லாதானின் தாளினைச் சேர்தலேயாகும் என்று கூறுவதும். தலை இறைவனை வணங்கவே படைக்கப்பட்டது என்பதும் பிறவியாகிய இப்பெருங்கடலைக் கடக்க வேண்டுமெனில் இறைவனது அடிகளைச் சேர்தல் வேண்டும் என்பதும் இறை உண்டு என்பதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் கூறிய வார்த்தைகள். அவர்களே இறைவனை, பேரொளியுடையவன் இறப்பிலி, பிறப்பிலி, நிர்க்குணன், நிராமயன், தனக்குவமை இல்லாதவன், பொறிவாயில் ஐந்தவித்தவன், இருவினையும் சேராதவன், விருப்பு வெறுப்பற்றவன், குணமிலி, வாலறிவன் போன்ற பல பண்புகளை உடையவனாகக் காட்டுவதும் இவண் நோக்குதற்குரியது.

இறை உண்மையைக் கூறியவர்கள், தெய்வம் பல என்ற கருத்தினை முறியடிக்க விரும்பிய சித்தர்கள் தெய்வ சக்தியைப் பிரித்துப் பார்க்க வேண்டாம் என்றும் அனைத்தும் ஒன்றே என்பதையும் விளக்குவதற்காக,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"- என்ற திருமூலரும்,

"ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேண்டும்"- என்ற அகத்தியரும்

"ஒன்றினைப் பிடித்தோர்க்கே உண்மை வசப்படும்"- என்று இடைக்காடரும் பாடுவர். உயர்வு தாழ்வு கற்பிக்கும் மக்களைக் கண்ட சிவவாக்கியரோ,

"நாழியப்பும் நாழியுப்பும் நாழியானவாறுபோல்
ஆழியோனு மீசனு அமர்ந்து வாழ்ந்திருந்திடம்
ஏறிலேறு மீசனு மியங்கு சக்ர தரனையும்
வேறுகூறு பேசுவார் வீழ்வர் வீணரகிலே"[1]

என்றும்

தில்லை நாய கன்னவன் திருவரங்க னும்மவன்
எல்லையான புவனமும் ஏக முக்தியானவன்
பல்லு நாவு முள்ளபேர் பகுந்து கூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே"

என்றும் பாடி இறையின் உண்மைத் தன்மையை உணர்ச்சிக் கொந்தளிப்புடன் விளக்குவார். இக்கருத்தையே பொய்கையாழ்வாரும்,

"பொன் திகழும் மேனிப் புரிசடையெம் புண்ணியனும்,

நின்றுலகந்தாய நெடுமாலும்"-என்றும்

"இருவரங்கத் தால் திரிவரேனும் ஒருவன்

ஒருவரங்கத் தென்றும் உளன்"- என்று கூறுவதையறியலாம்.

இவ்வுலகில் நல்ல நண்பர்களைத தேர்ந்து தெளிய வேண்டியதைப் போலவே தெய்வத்தையும் தெளிதல் வேண்டும். தெளிந்த பின் அவ்வொரு தெய்வத்தையே போற்றுதல் வேண்டும் என்றும் சித்தர்கள் நமக்கு அன்புக்கட்டளை விடுக்கின்றனர்.

போலிகளும் உண்மைத் துறவியரும்

எதிலும் பற்றற்று பரமனுக்கு நிகராக நிற்கும் இத்துறவு நிலையினைச் சில போலிகள் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றினர். இதனை,

காவியுஞ் சடைமுடி கமண்டலங்க ளாசனம்

தாவுருத்தி ராட்சம் யோகத் தண்டு கொண்ட மாடுகள்

தேவியை யலைய விட்டுத் தேசமெங்கும் சுற்றியே

பாவியென்ன வீடெலாம் பருக்கை கேட்டலைவரே"

என்றும்

முத்திசேரச் சித்தியிங்கு முன்னளிப்பேன் பாரெனச்

சத்தியங்கள் சொல்லியெங்குஞ்சாமி வேடம் பூண்டவர்

நித்தியம் வயிறு வளர்க்க நீதிஞானம் பேசியே

பத்தியாய்ப் பணம்பறித்துப் பாழ்நரகில் வீழ்வரே"

என்றும் பாடிப் போலித் துறவிகளைச் சிவவாக்கியர் விளக்குவர்.

இத்தகைய பொய்யர்களினாலேயே உண்மைத் துறவியர் ஏளனப்படுத்தப்பட்டனர். காவியுடை, கமண்டலம், சடைமுடி, உருத்திராக்கம் என்னும் இத்தகைய அலங்காரங்கலுடன் வலம்வரும் போலிகள் பெண்களை வசியப்படுத்துதல், இல்லங்களில் பொருட்களைத் திருடுதல், பொய்கூறுதல், மக்களின் அறிவை மயக்கிப் பொருளைப் பறித்தல் முதலான பல்வேறு தீய செயல்களில் ஈடுபட்டனர். செல்வந்தர்களாக்குவேன், பிள்ளைவரம் தருவேன் என்றெல்லாம் கூறி ஏமாற்றினர்.

இவர்களது கீழான இழி செயல்களால் இத்தகைய உடை உடுத்திக் கொண்டு வரும் எவரையும் உலகத்தார் நம்புவதில்லை. இத்தகைய உலகியல் நடப்பு நிலைகளைப் புரிந்துகொண்ட துறவியர் தங்களுக்கென்று தனியான உடைகளையோ அன்றி அணிகலன்களையோ கொள்வதில்லை. கந்தை ஆடையினை மட்டுமே கொண்டனர். பசித்தால் பிச்சை எடுத்து உண்டனர். இப்படிப்பட்ட உண்மைத் துறவியரை நாம் அடையாளம் காணுதல் வேண்டும்.

## வணங்கும் முறை

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிகளில் இறைவழிபாடாற்றி இறைவனை அடைதல் வேண்டும் என்னும் சித்தர்கள் இறைவனை வழிபடும் முறைகளையும் தெரிவிப்பர்.

நன்கு தேர்ந்த தெய்வத்தினை நாள்தோறும் தரையிலே தலைபடக் குடம்பிடுதல் வேண்டும். கை ஒன்றினைச் செய்ய, கண் ஒன்றினைப் பார்க்க, கருத்தொன்றினை எண்ண, வஞ்சகமுடைய நா ஒன்றினைப் பேச, உடல் ஒன்றினைச் சார, சொல் ஒன்றினைக் கேட்க நாம் பூசைகள் செய்தல் கூடாது. ஐம்புலன்களும் அவனையே நினைத்து, அவனது உணர்விலேயே ஆழ்ந்திருக்கச் செய்தல் வேண்டும் என்னும் கருத்தமைய,

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய்வினை தீர்த்தவனே"

என்று பாடும் பட்டினத்தார்,

நன்மைகள் வேண்டுமெனில் நெஞ்சே நீ அவனையே, மனத்தில் நினைத்து, விழியால் புனல் சிந்தி விம்மியழு என்பர். இதனை,

"ஒழியாப் பிறவி எடுத்து ஏங்கி ஏங்கி உழன்ற நெஞ்சே
அழியாப் பதவிக்கு அவுடதம் கேட்டி அநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடையானை மனத்தில் உன்னி
விழியால் புனல்சிந்தி விம்மியழு நன்மைகள் வேண்டும் என்றே"

என்ற பாடலால் அறியலாம். அவரே,

"நீறார்த்த மேனி உரோமம் சிலிர்த்து உளம் நெக்கு நெக்குச்
சேராய்க் கசிந்து கசிந்தே உருகி, நின் சீரடிக்கே மாறாத்
தியானமுற்று ஆனந்தமேற் கொண்டு மார்பில் கண்ணீர்
ஆறாய்ப பெருகக் கிடப்பதென்றோ? கயிலாயத்தனே!"

என்றும் பாடுவர். தமக்கு என்று எந்தவித பற்றுதலும் இல்லாதவர்கள் இறைவனையே பற்றி நிற்பதால் அவ்விறைவனையே காணவும் கூடவும் விழைவர். இதனை,

"கையார ஏற்று நின்று அங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையாது உடுத்து, நின் சந்நிதிக்கே வந்து சந்ததமும்
மெய்யார நிற்பணிந்து உள்ளே உரோமம் விதிர் விதிர்ப்ப
ஐயா என்று ஓலம் இடுவது என்றோ? கயிலாயத்தனே!"

என்றும் பாடித் தெரிவிப்பர். இவ்வாறு இறைவனின் அடிபணிந்து அழுது நின்றால் வேண்டியவற்றைப் பெறலாம் என்பதுடன் இறையுடன் இணைதல் எனும் முடிவையும் எய்தலாம் என்பர்.

## இரண்டற்ற நிலை: சிவனும் சீவனும் ஒன்றாய் நிற்றல்

உயிரின் தன்மைகளை உணர்ந்த சித்தர்கள், அது சிவத்தினின்றும் வேறுபட்டதல்ல என்பதையும் மக்களுக்கு உணர்த்துகின்றனர். சீவனே சிவமாகவும் சிவமே சீவனாகவும் இருப்பதைப் பட்டினத்தார்,

"எனக்குள்ளே நீயிருக்க உனக்குள்ளே நானிருக்க"

என்று பாடித் தெரிவிப்பர். சிவவாக்கியர்,

"எனக்குள் நீயுனக்குள் நான் இருக்குமாற தெங்ஙனே"

என்றும்,

"என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்

என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்து யான் உணர்ந்துகொண்டனே"
என்றும்,
"பாலுள் நெய் கலந்தவாறும்"
"கண்ணிலே கண்மணியுள்ளது போலும்"
என்றும்,
"நமசிவாய என்ற எழுத்தாகி நம்முளே இருப்பது"
என்றும்
"என்னுள்ளே யிருப்பவனே யெங்குமாகி நிற்பனே"
என்றும் பத்திரகிரியார்,
"என்னை விட்டு நீங்காமல் என்னிடத்து நீயிருக்க
உன்னை விட்டு நீங்கா தொருப்படுவ தெக்காலம்"
என்றும் பாடுவதால் அறியலாம்.

## முடிவுரை

இக்கட்டுரையின் வாயிலாக, சித்தர்கள் பெறுவதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்ற மனிதர்கள் வாழ்நாட்களை வீணாக்கிவிடாமல் இறை உண்மை உணர்ந்து, அதனையும் ஒன்றெனக் கொண்டு, வழிபடும் முறைகளால் பத்தியுடன் உள்ளத்திருத்தி, சாயுச்சிய நிலையாகிய இறையுடன் இரண்டறக் கலக்கும் நிலையினை அடைதல் வேண்டும் என்ற தம் விருப்பங்களைத் தங்களின் இறைக் கொள்கையாகத் தந்து சென்றுள்ளனர் என்பது தெளிவாக விளக்கப்பெறுகின்றது.

## References

Ilamathi Janakiraman, (1991) Thoughts of Siddhas (Philosophy Literature), Kurunji pathippagam, Puducherry, India

Ramanathan, R., (1968) Siddhar Songs known as Gnanakovai, Prema pathippagam, Third Edition, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License